# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2016 - 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்:............................................................... நேரம்: 90 மணித்துளிகள்

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

**எ - கா**

தமிழருடைய வீரத்தைப்பற்றிக் கூறும் நூல் புறநானூறு.
( சிலப்பதிகாரம், நாலடியார், புறநானூறு )

1. ______________ உணவை உண்டேன்.
( நான், நீ, அவன் )

2. வாய்க்காலில் நீர் ______________ என ஓடியது.
( சலசல, கீச்கீச், மடமட )

3. காலைக்காட்சி என்பதைப் பிரித்து எழுதினால் ______________ .
( காலைக்+காட்சி, காலைய் + காட்சி, காலை+காட்சி )

4. 700 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .
( எளுநூறு, எழுநூறு, எலுநூறு )

5. தகடூரை ஆண்ட மன்னன் ______________ .
( பண்டாரவன்னியன், அதியர்மான், பாரி )

6. நீ தாயகத்தில் இருந்து ______________ வந்தாய்?
( எது, என்ன, எப்போது )

7. தமிழினி ______________________ கவிதையை அப்பா பாராட்டினார்.

( எழுதிய, நடித்த, பேசிய )

8. பூ + பொழில் என்பதைச் சேர்த்து எழுதினால் ______________________ .

( பூப்பொழில், பூம்பொழில், பூம்ப்பொழில் )

9. உழத்தி ______________________ நெல்லை அறுவடை செய்தாள்.

( விளைந்த, கட்டிய, எடுத்த )

10. கடல்வழியாகப் பொருட்களை ஏற்றி இறக்கப் பயன்படும் உந்து ______________________ .

( விண்ணுந்து, பேருந்து, நீருந்து )

11. தண்ணீர் என்பதன் எதிர்ச்சொல் ______________________ .

( வென்நீர், வென்னீர், வெந்நீர் )

12. தமிழில் இயல் இசை ______________________ என மூன்று பிரிவுகள் உள்ளன.

( நாடகம், சிற்பம், ஓவியம் )

13. வாத்து ______________________ என்று கத்தும்.

( கீகீ, காகா, குவாகுவா )

14. தமிழீழத்தின் தேசிய மலர் ______________________ .
( தாமரைப்பூ, கார்த்திகைப்பூ, மல்லிகைப்பூ )

15. அடங்காப்பற்று எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட இடம் ______________________ .
( யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை )

16. இலக்கியன் நேற்றுக் கடற்கரையில் மணல் வீடு ______________________ .
( கட்டுகின்றான், கட்டினான், கட்டுவான் )

17. வாழைக்குலையில் காய்கள் ______________________ . இருக்கும்.
( சீப்புச்சீப்பாக, குலைகுலையாக, கொத்துக்கொத்தாக )

18. கிழமையில் நான்காவது நாள் ______________________ .
( வெள்ளி, வியாழன், புதன் )

19. லூவரில் சிறப்பு வாய்ந்த ______________________ காணப்படுகின்றன.
( சிலைகள், முத்திரைகள், ஓவியங்கள் )

20. நாங்கள் தாயகத்துக்கு ______________________ செல்லலாம்.
( விண்ணுந்தில், சிற்றுந்தில், தொடருந்தில் )

புள்ளிகள் 20

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| கடகட | கலீர்கலீர் | பூவும் பிஞ்சும் |
| ~~பளபள~~ | விறுவிறு | தடதட |

**எ - கா**

குயிலியின் வளையல்கள் பளபள என மின்னின.

1. மாமரத்தில் ______________ காணப்பட்டன.

2. பள்ளிக்கு நேரமாகிவிட்டதால் இனியன் ______________ என்று நடந்து சென்றான்.

3. அரங்கில் ஆடிய மங்கையின் சலங்கை ______________ என்று ஒலித்தது.

4. கள்வன் மாடிப்படிகளில் ______________ என்று ஓடினான்.

5. மாட்டு வண்டி கற்பாதையில் ______________ எனச் சென்றது.

புள்ளிகள் 10

**3) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்க.**

**எ - கா**

நிலா இரவில் ஒளியைத் ______தருகின்றது______ .

1. தமிழினி ஓட்டப்போட்டியில் முதாலாம் இடத்தைப்

______________________ .

2. வாழை நாரில் பூமாலை ______________________ .

3. நேற்று எனது பள்ளியில் ஆண்டுவிழா

______________________ .

4. குழந்தை தொட்டிலில் நன்றாக ______________________ .

5. மாமி தாயகத்திலிருந்து நாளை ______________________ .

புள்ளிகள் 10

**4) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புவோம்.**

**எ - க**

ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து ___நீளமாக___ இருக்கும்.
(நீலமாக, ~~நீளமாக~~)

1. அண்ணா தமிழ்ப் ______________ ச் சென்றார்.
(பள்ளிக்கு, பல்லிக்கு)

2. கொக்கின் ______________ நீண்டு இருக்கும்.
(அலகு, அழகு)

3. வாழைப் ______________ சத்துகள் நிறைந்திருக்கின்றன.
(பழத்தில், பலத்தில்)

4. மீன்கள் ______________ சிக்கின.
(வளையில், வலையில்)

5. அம்மா முற்றத்தில் ______________ போட்டார்.
(கோளம், கோலம்)

புள்ளிகள் 05

**5) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தி | யா | ழ் | ப் | பா | ண | ம் | மு |
| ரு | மூ | ம | ன் | னா | ர் | நா | ல் |
| க் | து | வ | வு | னி | யா | ல | லை |
| கு | ரை | ந | ல் | வ | ழி | டி | த் |
| ற | ஆ | த் | தி | சூ | டி | யா | தீ |
| ள் | ம | ணி | மே | க | லை | ர் | வு |
| ம | ட் | ட | க் | க | ள | ப் | பு |
| தி | ரு | கோ | ண | ம | லை | | |

| நூல்கள் | இடங்கள் |
|---|---|
| எ - கா திருக்குறள் | யாழ்ப்பாணம் |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |

புள்ளிகள்10

## 6) மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| மோர் | ~~நன்மைகள்~~ | வண்டி |
| பால் | யானை | ஆடை |

**எ - கா**

விலங்குகளால் எங்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. ஆடு, ஆ என்பன ________ தருகின்றன. பால் சத்தும் சுவையும் உடையது. ஆவின் பாலில் இருந்து தயிர், ________, வெண்ணெய், நெய் என்பன பெறப்படுகின்றன. எருது, குதிரை போன்ற விலங்குகள் ________ இழுக்கப் பயன்படுகின்றன. செம்மறி ஆட்டின் மயிரிலிருந்து கம்பளி ________ செய்யப்படுகிறது. ________ பளுவான பொருட்களைத் தூக்குவதற்குப் பயன்படுகின்றது. நாய் வீட்டுக் காவலுக்கும் வேட்டைக்கும் உதவுகின்றது.

புள்ளிகள் 10

7) **ஒரு சொல்லில் விடை எழுதுக.**

**எ - கா**

பண்டாரவன்னியன் யாருடன் போர் புரிந்தான்?

ஆங்கிலேயருடன்

1. முக்கனிகளில் ஒன்றின் பெயரைத் தருக.

2. கொன்றைவேந்தன் என்ற நூலை எழுதியவர் யார் ?

3. பிரான்சு நாட்டின் தலைநகரின் பெயர் என்ன?

4. அதியர்மான் ஏன் காட்டுக்குச் சென்றான்?

5. சிலப்பதிகாரம் யாரால் எழுதப்பட்டது?

புள்ளிகள் 10

## 8) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

காகம் ஒன்று மரத்தில் கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அது தாகத்தினால் தண்ணீரைத் தேடி அலைந்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. காகம் களைப்புடன் மரத்தில் வந்து அமர்ந்தது. அப்போது மரத்தின் கீழ் ஒரு பானையைக் கண்டது. அப்பானையுள் சிறிதளவு நீர் இருந்தது. அந்த நீரைக்குடிக்க நினைத்தது. ஆனால் காகத்திற்குப் பானையில் இருந்த தண்ணீர் எட்டவில்லை. உடனே காகம் சிறிய கற்களைப் பொறுக்கிப் போட்டது. கற்களைப் போடப் போடத் தண்ணீர் மேலே வந்தது. காகம் அத் தண்ணீரைக் குடித்தது. காகத்தின் தாகம் அடங்கியது. காகம் தன் கூட்டிற்குப் பறந்து சென்றது.

**எ - கா**

எது கூடு கட்டி வாழ்ந்து வந்தது?

காகம் கூடு கட்டி வாழ்ந்து வந்தது ________________ .

1. காகம் எதைத் தேடி அலைந்தது?

   ________________________________ .

2. மரத்தின் கீழ் காகம் எதனைக் கண்டது?

   ________________________________ .

3. பானைக்குள் என்ன இருந்தது?

   ________________________________ .

4. எவற்றைப் போடப் போடத் தண்ணீர் மேலே வந்தது?

   ________________________________ .

5. காகம் எங்கே பறந்து சென்றது?

   ________________________________ .

புள்ளிகள் 10

9) **படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.**



1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

5. ______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15